THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon Minister whether any survey had been made to ascertain the number of physically handicapped persons in Tamil Nadu and if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. கே. என். [illegible] : உடல் ஊனமுற்றவர்களுக்காகத் தனியாகத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் துறையில் உள்ளவர்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த சட்டம் செய்யப்படுமா ? இதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முனைவருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒரு யோசனையை மத்திய அரசாங்கத்திற்குச் சொன்னோம். அவர்கள்தான் சட்டம் கொண்டுவர வேண்டும். அவர்கள் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவர முன் வரவில்லை. இப்போது உடல் ஊனமுற்றவர்கள் தவிர, மற்றவர்களுக்கே வேலையில்லாத் திண்டாட்டம் ஏராளமாக இருக்கிறது. ஆகவே, கட்டாயப் படுத்த முடியாது என்று மத்திய அரசு சொல்லி வருகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாக உடல் ஊனமுற்றவர்களுக்கு எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. எஸ். [illegible] : உடல் ஊனமுற்றோருக்கு நமது அரசு வேலை வாய்ப்பு தேடித் தருகிற அளவிற்கு சிறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது கிடைக்கிற வரையில் இப்போது வறுமையில் உழல்பவர்களுக்கு ஏதேனும் உதவித் தொகை அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Is there any separate employment Officer in the Employment Exchanges for recommending physically deformed people for employment to various Offices?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி தனிப்பட்ட கவனம் இவர்கள் மீது செலுத்தப்படுவதற்காக இப்போதே ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது